සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

| தரம் 06 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 62 T |
|---|---|---|

சுட்டெண் ..........................................

## குடியியற் கல்வி

நேரம் 2 மணித்தியாலம்

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **01 முதல் 05 வரையான வினாக்களுக்குரிய விடையினை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டினுள் எழுதுக.**

01. எமது குடும்பம் தவிர்த்து மாணவர்களை சிறந்த பிரஜைகளாக்குவதற்கு உதவும் நிறுவனமானது ............................................ ஆகும்.
(பாடசாலை/ மேலதிக வகுப்புக்கள்/ விளையாட்டு மைதானம்/ சிறுவர் சமூகம்)

02. பாடசாலையில் பிரதான நிருவாகப் பதவியானது ................................................ ஆகும்.
(உதவி அதிபர்/ அதிபர்/ சிரேஷ்ட பிரிவு தலைவர்/ பிரதான மாணவ தலைவன்)

03. பாடசாலை ஒழுங்கமைப்பு கட்டமைப்பில் இடம் பெறாதவர்கள் ................................................. ஆவார்கள்.
(மாணவத் தலைவர்கள்/ பழைய மாணவர்கள்/ கல்விசாரா ஊழியர்கள்/ வகுப்பாசிரியர்கள்)

04. உங்களுடைய சுய விபரக் கோவையொன்றில் உள்ளடங்குவது ................................................. ஆகும்.
(தந்தை தொடர்பாக/ நீங்கள் தொடர்பாக/ அதிபர் தொடர்பாக/ வகுப்பாசிரியர் தொடர்பாக)

05. ................................................ என்பது பாடசாலை மாணவன் என்ற வகையில் உங்கள் கடமையாகும்.
(பாடசாலை வளங்களைப் பாதுகாத்தல்/ பாடசாலை சட்டதிட்டங்களை மீறல்/ ஆசிரியர்களை கண்காணித்தல்/ பாடப்புத்தகம் பகிர்ந்தளித்தல்)

- **06 முதல் 10 வரையுள்ள கூற்றுக்கள் சரியெனின் (✓) எனவும், பிழையெனின் (✗) எனவும் குறிக்க.**

06. பிறப்புச் சான்றிதழ் மூலம் உங்களுடைய சரியான பெயரைத் தெரிந்து கொள்ள முடியும். ( )

07. C.W.W. கன்னங்கர அவர்கள் 1947 இல் இலங்கைத் தேசிய சங்கத்தின் தலைவராக செயற்பட்டார். ( )

08. குடும்பத்தின் மூலம் நபர் ஒருவரது திறமைகளை விருத்தி செய்து கொள்ளலாம். ( )

09. பொறுமை இன்மை ஒருவரிடம் காணப்படும் சிறந்த பண்பாகும். ( )

10. நண்பர்களோடு அறிவை பகிர்ந்து கொள்ளுதல் தன்னுடைய இலக்கை அடைவதற்காக பயன்படுத்தக்கூடிய ஒரு முறையாகும். ( )

- **11 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

11. உங்களுடைய திறமைகளை விருத்தி செய்வதற்காக செய்ய வேண்டியது எது?
    1. அடுத்தவர்களுடன் தன்னை ஒப்பிடுதல்.
    2. உங்கள் திறமைகளை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிப்படுத்தல்.
    3. அமைதியாய் இருத்தல்.
    4. பத்திரிகை வாசித்தல்.

12. பலவீனங்களைக் குறைப்பதற்காக ஒருவர் செய்ய வேண்டியது எது?
    1. தனது பலவீனங்களை இனம் காணுதல்.
    2. அடுத்தவரை தோற்கடித்தல்.
    3. ஏமாற்றுதல்
    4. சண்டை பிடித்தல்

13. பிள்ளை நேயப் பாடசாலை சூழலின் பண்புகளில் ஒன்று,
    1. ஆசிரியர்- மாணவர் தொடர்பு குறைவாக காணப்படல்.
    2. ஆசிரியர்- மையக் கல்வி முறைமை
    3. மாணவர்களில் அடிப்படை உரிமை இல்லாமல் போதல்.
    4. பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்.



kalvi.lk


14. சவால்களை வெற்றிகொள்வதற்காக வளர்த்துக் கொள்ளவேண்டிய பண்பொன்றானது,
   1. தன்னம்பிக்கை
   2. ஆசிரியர்களுக்கு கட்டுப்படுதல்
   3. விளையாட்டுக்களில் ஈடுபடுதல்
   4. நண்பர்களோடு செயலாற்றுதல்.

15. திட்டமிடுதல் மற்றும் ஒழுங்கமைப்பினால் கிடைக்கும் நன்மை ஒன்று,
   1. பிரச்சினை அதிகரிக்கும்
   2. காலம் வீணடிக்கப்படும்
   3. பதற்றம் குறையும்
   4. வளங்கள் வீணடிக்கப்படும்

- **16 முதல் 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள படத்தைக் கொண்டு விடையளிக்க.**



**A**



**B**

16. படம் A ல் காட்டப்படுபவர் கலாநிதி ................................................ அவர்களாவார்.

17. இவர் சிறுவயதில் இருந்து பல்கலைக்கழகம் வரை ............................................ பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

18. இவர் .......................................... எனப் போற்றப்படுவார்.

19. படம் B யினால் காட்டப்படுவது ............................................... ஆவார்.

20. இவர் .................................................... நிலையங்களை நிர்மாணித்தார்.

* * * * *



kalvi.lk

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்க.**
- **முதலாவது வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய 4 வினாக்களுக்கும் 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01. வரலாற்றை தெரிந்து கொள்ள பயன்படும் அனைத்தும் மூலாதாரங்களாகும்.

i. உமது பாடசாலை வரலாற்றை தெரிந்து கொள்வதற்காக காணப்படும் மூலாதாரங்கள் 2 னைக் குறிப்பிடுக.

ii. பாடசாலையின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலச்சினைகள் 2 னைக் குறிப்பிடுக.

iii. உங்களுடைய பாடசாலை அமைந்துள்ள கோட்ட மட்ட கல்வி வலயத்தையும் வலய மட்டக் கல்வி வலயத்தையும் குறிப்பிடுக.

iv. பாடசாலை மாணவர் என்ற வகையில் உங்களுடைய கடமைகள் 2 னைக் குறிப்பிடுக.

v. பாடசாலைக்கு சட்டதிட்டங்கள் அவசியமாவதற்கான காரணிகள் 2 தருக.

vi. பாடசாலையின் சம்பிரதாயங்கள் 2 குறிப்பிடுக.


vii. பாடசாலைக் கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

viii. உங்களுடைய பலவீனங்கள் 2 ஐ எழுதுக.

(2x8=16 புள்ளிகள்)

02. "மாணவர் பாடசாலை ஒழுங்கமைப்பின் பிரதான அங்கத்தவராவார்."

i. கீழே தரப்பட்டுள்ள பாடசாலை ஒழுங்கமைப்பை பூரணப்படுத்துக.




(3 புள்ளிகள்)

ii. மேலே B யில் உள்ள நபரினது கடமைகள் 4 இனைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பாடசாலை ஒழுங்கமைப்பில் இடம்பெறும் வேறு குழுக்கள் 4 இனைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

03. i. ஒருவரது திறமைகளை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் 3 தருக.

(3 புள்ளிகள்)

ii. கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| திட்டமிட்ட மாணவன் | திட்டமிடப்படாத மாணவன் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |

(8 புள்ளிகள்)



kalvi.lk

04. i. பாடசாலை மாணவன் என்ற வகையில் உமது உரிமைகளையும் அவற்றுடன் இணைந்த கடமைகளையும் குறிப்பிடுக.


| உமது உரிமைகள் | அதனுடன் இணைந்த கடமைகள் |
|---|---|
| 1.<br>2. | 1.<br>2. |

(4 புள்ளிகள்)

ii. பாடசாலையால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் 4 ஐக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)


iii. ஆசிரியர்களுக்காக மாணவர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் 3 னைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

05. i. கீழே தரப்பட்டுள்ள படத்தின் இடைவெளிகளை பூரணப்படுத்துக.





(3 புள்ளிகள்)

ii. கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.




(4 புள்ளிகள்)

iii.




(4 புள்ளிகள்)



kalvi.lk

06. பாடசாலையில் காணப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் சம்பிரதாயங்களை இனங்கண்டு சரியாக இணைக்க.

| சட்டதிட்டங்கள் |
|---|

| சம்பிரதாயங்கள் |
|---|

1. பாடசாலை சீருடையை முறையாக பேணுதல்.
2. பாடசாலை மதவழிபாடுகளை முறையாக நிறைவேற்றல்.
3. தினமும் பாடசாலைக்கு சமூகமளித்தல்.
4. தலைமைத்துவத்திற்கு கீழ்படிதல்.
5. பாடசாலை நேரத்தில் பாடசாலையினுள் இருத்தல்.
6. நேரசூசிக்கு அமைய வேலை செய்தல்.
7. பாடசாலை தொடங்குவதற்கு முன் சமூகமளித்தல்.
8. பாடசாலை கீதத்தின் போது உரிய முறையில் இருத்தல்.
9. தொன்றுதொட்டு பேணப்படும் பழக்கவழக்கங்களை ஏற்று நடத்தல்.
10. ஆசிரியர்களை மதித்தல்.
11. சகோதர மாணவர்களுக்கு உதவி செய்தல்.


07. தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு கீழுள்ள குறுக்கெழுத்து சட்டகத்தை பூரணப்படுத்துக.

இடமிருந்து வலம் :-

2. இதனைப் பெற்றுக் கொள்வது மாணவர்களது உரிமையாகும்.
4. பாடசாலையினது தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலச்சினை ஒன்றாகும்.
5. மாணவர்களிடம் காணப்பட வேண்டிய சிறந்த பண்புகளுள் ஒன்று.
6. பாடசாலை ஒழுங்கமைப்பினுள் இடம்பெறும் வேறு குழு ஒன்று.
8. பாடசாலையில் தொன்று தொட்டு பேணப்பட்டு வரும் பழக்க வழக்கங்கள்.

மேலிருந்து கீழ் :-

1. மாணவர்களது அறிவை மேலும் வளர்த்துக் கொள்வதற்காக அரசினால் பாடசாலைகளில் அமைக்கும் இடம்.
3. மாணவர்கள் இந்த துறையிலும் தனது திறமைகளை வெளிப்படுத்துவார்கள்.
4. பாடசாலைக்கும் இவர்களுக்கும் இடையில் தொடர்பு பேணப்படுகின்றது.
5. பாடசாலை ஒழுங்கமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நபர்களுள் இவர்களும் அடங்குவர்.
7. மாணவர்களினால் கட்டாயம் பேணப்பட வேண்டிய ஒன்று
8. மாணவர்கள் இதற்கு முகம் கொடுப்பதால் தனது இலக்கை அடையலாம்.




(11 புள்ளிகள்)



kalvi.lk

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 06 - குடியியற் கல்வி (62)**
**விடைப்பத்திரம்**

## பகுதி I

| வினா இல. | | விடை | வினா இல. | | விடை |
|---|---|---|---|---|---|
| 01. | | பாடசாலை | 02. | | அதிபர் |
| 03. | | கல்விசாரா ஊழியர்கள் | 04. | | நீங்கள் தொடர்பாக |
| 05. | | பாடசாலை வளங்களைப் பாதுகாத்தல். | 06. | | சரி |
| 07. | | பிழை | 08. | | சரி |
| 09. | | பிழை | 10. | | சரி |
| 11. | | 2 | 12. | | 1 |
| 13. | | 4 | 14. | | 1 |
| 15. | | 3 | 16. | | C.W.W. கன்னங்கர |
| 17. | | இலவசக் கல்வி | 18. | | இலவசக் கல்வியின் தந்தை |
| 19. | | பேராசிரியர் சேனக பிபிலே | 20. | | அரச ஒசுசல |

## பகுதி II

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | i. | | | நினைவுப் பலகைகள், புராதன நூல்கள், படங்கள் மற்றும் புகைப்படங்கள் ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் (2ம் பக்கம்) | |
| | ii. | | | மகுடவாசகம், பாடசாலை இலச்சினை, பாடசாலைக் கொடி, பாடசாலை கீதம், சீருடை | |
| | iii. | | | பொருத்தமான விடை | |
| | iv. | | | தினந்தோறும் பாடசாலைக்குச் செல்லல், கல்வியை விருப்புடன் கற்றல்... (10ம் பக்கம்) | |
| | v. | | | பாடசாலையினுள் சிறந்த கற்றல் சூழல் ஒன்றை ஏற்படுத்தும் முறையாக நிர்வகிக்க, ஒழுக்கசீலர்களை உருவாக்க, மாணவர் உரிமைகளை பாதுகாக்க. | |
| | vi. | | | பாடசாலை சட்டதிட்டங்கள், கலாசாரம், பழக்கவழக்கங்கள். | |
| | vii. | | | காலைக்கூட்டத்தின் போது, இல்ல விளையாட்டுப் போட்டியின் போது, ஏனைய விழாக்கள் | |
| | viii. | | | பொறுமையின்மை, கோபம், பொய் பேசுதல், சுயநலம், சண்டை பிடித்தல்... | 16 |
| 02. | i. | | | A மாணவர்கள் B அதிபர் C ஆசிரியர்கள் | |
| | ii. | | | கல்வி செயற்பாடுகளின் தலைவர், பாடசாலை அனைத்து செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தல், பிள்ளைகளை சேர்த்தல், அவர்களது வகுப்புகளை ஒழுங்கமைத்தல், நேரசூசி தயாரித்தல் (8, 9ஆம் பக்கங்கள்) | |
| | iii. | | | விளையாட்டுக் குழு, நலன்புரிக் குழு, மாணவர் தலைவர் குழு, சுற்றாடல் குழு, சமயக்குழு, சாரணர் குழு | 11 |
| 03. | i. | | | தனது வாழ்க்கை அனுபவங்கள், பிறரின் வாழ்க்கை அனுபவங்கள், சமூக குழுக்கள் தனது திறமையோடு தொடர்புடைய நூல்களை வாசித்து (19ம் பக்கம்) | |
| | ii. | | | **திட்டமிட்ட மாணவன்**<br>முறையாக செயற்படுவர், உளநெருக்கடி இன்மை, நேரத்தை உச்சமுறையில் பயன்படுத்தல், நோக்கத்தை அடைதல், இலகுவாக சவால்களை வெற்றிகொள்ளல்.<br>**திட்டமிடப்படாத மாணவன்**<br>அவசியமானதை கைவிடல், உளநெருக்கடி, நேரம் வீணடிக்கப்படல், பின்னடைவு, சவால்களுக்கு முகம் கொடுக்க சிரமப்படல். | 11 |



kalvi.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04. | i.<br><br><br><br><br><br>ii.<br><br>iii. | | | **உரிமை** / **கடமைகள்**<br>* உமது கருத்துக்களை வெளிப்படுத்தல் / * சகமாணவர்களின் கருத்துக்களை மதித்தல்.<br>* கல்வி கற்றல் / * நன்றாக கல்வி கற்றல்.<br>* பாடசாலையினுள் பாதுகாப்பாக இருத்தல். / * நீங்கள் வாழும் சூழலைப் பாதுகாத்தல்.<br>இலவசக் கல்வி, இலவசப் பாட நூல்கள், ஆய்வு கூட வசதி, இலவச சீருடை, நூலகம்<br>கற்றல் நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபடல், தேவையான போது உதவி செய்தலும் ஒத்துழைப்பு வழங்குதலும், ஆசிரியர்களில் ஆலோசனைகளை கேட்டு செயற்படுதல், மதிப்பளித்தல். | 11 |
| 05. | i.<br><br><br>ii.<br><br>iii. | | | A நலன் விரும்பிகள்<br>B பழைய மாணவர்கள்<br>C பல்வேறு அமைப்புக்கள்<br>வாழ்க்கைக்குத் தேவையான தேர்ச்சி விருத்தி செய்தல், நல்ல தலைவர்களை உருவாக்குதல், சிறந்த கல்வி வழங்குதல், நல்வழிகாட்டல்<br>படசாலை சொத்துக்களைப் பாதுகாத்தல், பாடசாலை வைபவங்களில் பங்கேற்றல், சுகாதார பாதுகாப்பு முறை அதிகம், கலாசார உரிமைகளை கல்வியில் உள்ளடக்க முயலுதல். (46 ம் பக்கம்) | 11 |
| 06. | i. | | | சட்டதிட்டங்கள் - 1, 3, 4, 5, 6, 7<br>சம்பிரதாயங்கள் - 2, 8, 9, 10, 11 | 11 |
| 07. | | | | இடமிருந்து வலம்<br>2. கல்வி<br>4. மகுட வாசகம்<br>5. கருணை<br>6. சாரணர் குழு<br>8. சம்பிரதாயம்<br><br>வலமிருந்து இடம்<br>1. நூலகம்<br>3. விளையாட்டு<br>4. மதகுரு<br>5. கல்விசாரா ஊழியர்<br>7. ஒழுக்கம்<br>8. சவால்கள் | 11 |

* * * * *



kalvi.lk

# GRADE 6,7,8

STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page